## 24

# எதிர்கொள்ளுதல், மன்னித்தல், ஒப்புரவாகுதல்

முந்தைய ஒரு அத்தியாயத்தில் நாம் இயேசுவின் மலைப்பிரசங்கத்தை ஆய்வுசெய்தபோது, நமக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்களை மன்னிப்பது எவ்வளவு முக்கியமானது என்பதைக் கற்றுக்கொண்டோம். நாம் அவர்களை மன்னிக்காவிட்டால் தேவன் நம்மை மன்னிக்க மாட்டார் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார் [பார்க்க, மத். 6:14—15].

ஒருவரை மன்னிப்பது என்றால் என்ன அர்த்தம்? வேத வசனங்கள் போதிப்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

இயேசுவானவர் மன்னிப்பை ஒருவருடைய கடனை அழித்து விடுவதோடு ஒப்பிட்டிருக்கிறார் [பார்க்க, மத். 18:23—35]. உங்களிடம் ஒருவர் கடன்பட்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். உங்களுக்கு அவர் கடன்பட்டிருப்பதிலிருந்து நீங்கள் அவரை விடுவிக்கிறீர்கள், கடன் பத்திரத்தை நீங்கள் அழித்துப்போடுகிறீர்கள். நீங்கள் இனிமேலும் பணம் திரும்பச் செலுத்தப்படுவதை எதிர்பார்க்கவில்லை. இனிமேலும் உங்களிடம் கடன்பட்டவரிடம் நீங்கள் கோபப்படுவதில்லை. அவர் உங்களிடம் கடன்பட்டபோது நீங்கள் அவரைப் பார்த்ததைவிட இப்போது அவரை வித்தியாசமாகப் பார்க்கிறீர்கள்.

தேவனால் மன்னிக்கப்படுவது என்றால் என்ன என்பதை நாம் உணரும்போது, மன்னிப்பது என்பதின் அர்த்தத்தைச் சிறப்பாகப் புரிந்துகொள்ள முடியும். அவர் நம்முடைய ஒரு பாவத்தை மன்னிக்கும்போது, அவருக்குப் பிரியமில்லாத ஒன்றைச் செய்துவிட்டதாக அவர் இனிமேலும் அதை நமது கணக்கில் வைத்துக்கொள்ளுவதில்லை. அந்தப் பாவத்தின் காரணமாக இனிமேலும் அவர் நம்மீது கோபமாக

இருப்பதில்லை. நாம் செய்ததற்காக அவர் நம்மைச் சிட்சிக்கவோ அல்லது தண்டிக்கவோ போவதில்லை. நாம் அவரோடு ஒப்புரவாக்கப் பட்டிருக்கிறோம்.

இதைப் போலவே நான் மெய்யாகவே ஒருவரை மன்னிப்பேன் என்றால், என் இருதயத்தில் அவரை விடுவிக்கிறேன். இரக்கம் காட்டுவதின்மூலம் நீதிக்காகவோ அல்லது பழிவாங்குவதற்காகவோ கொண்டிருக்கும் ஆசையை மேற்கொள்ளுகிறேன். நான் இனிமேலும் எனக்கு விரோதமாகப் பாவம் செய்த நபரின்மீது கோபப்படுவதில்லை. நாங்கள் ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம். *நான் ஒருவர்மீது கோபத்தையோ அல்லது வன்மத்தையோ மனதில் வைத்திருப்பேன் என்றால் நான் அவரை மன்னிக்கவில்லை என்றுதான் அர்த்தம்.*

இதைப் பொருத்தவரையில் கிறிஸ்தவர்கள் அடிக்கடி தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள். தாங்கள் ஒருவரை மன்னித்து விட்டதாக அவர்கள் சொல்லுகிறார்கள். ஏனென்றால் தாங்கள் இதைச் செய்ய வேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆனால் அந்த நபர்மீது தங்கள் மனதில் இன்னும் வன்மத்தைக் கொண்டிருக் கிறார்கள். அடக்கிவைக்கப்பட்ட கோபம் வெளியே வந்துவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் தீங்கிழைத்தவர்களைச் சந்திப்பதைத் தவிர்க் கிறார்கள். நான் எதைக் குறித்துப் பேசுகிறேன் என்பதை நான் அறிவேன். ஏனென்றால் நானே அப்படி நடந்துகொண்டிருக்கிறேன். நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளாதிருப்போமாக. சக விசுவாசியிடம் நாம் கோபத்தைக் கூடக் காட்டக்கூடாது என்று இயேசுவானவர் விரும்பு கிறார் என்பதை நினைவில் வைத்திருங்கள் [பார்க்க, மத். 5:22].

இப்போது நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். தீங்கிழைத்தவர்களில் மன்னிப்பு கேட்பவரையா அல்லது மன்னிப்பு கேட்காதவரையா யாரை மன்னிப்பது எளிதாக இருக்கிறது? தனது தவறை ஒப்புக்கொண்டு நம்மிடம் மன்னிப்பு கேட்கும் ஒருவரை மன்னிப்பதே எளிதான காரியம் என்று எல்லோரும் சொல்லுவார்கள். உண்மையில் மன்னிப்பு கேட்காத ஒருவரை மன்னிப்பதைவிட மன்னிப்பு கேட்கும் ஒருவரை மன்னிப்பது முடிவில்லாத வகையில் எளிதாக இருக்கிறது. மன்னிப்பு கேட்காத ஒருவரை மன்னிப்பது செயல்பூர்வமாக இயலாத காரியமாகத் தோன்றுகிறது.

மற்றொரு கோணத்திலிருந்து நாம் இதைப் பார்ப்போம். தீங்கு செய்யும் ஒருவர் மனந்திரும்பும்போது அவரை மன்னிக்க மறுப்பதும், தீங்கு செய்த ஒருவர் மனந்திரும்பாமலிருக்கும்போது அவரை மன்னிக்க மறுப்பதும் இரண்டுமே பாவமாக இருக்குமானால் எது பெரிய பாவம்? இந்த இரண்டுமே தவறாக இருக்குமானால், மனந்திரும்பிய ஒருவரை மன்னிக்காமல் இருப்பதே பெரிய தவறாகும் என்று நாம் எல்லோருமே ஒப்புக்கொள்ளுவோம்.





**வேதாகமத்திலிருந்து ஒரு ஆச்சரியமான செய்தி**

இவையெல்லாம் மற்றொரு கேள்வியைக் கேட்கும்படி என்னை வழிநடத்துகின்றன. நமக்கு விரோதமாகப் பாவம் செய்யும் எல்லோரையும் நாம் மன்னிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க் கிறாரா? தங்களைத் தாங்களே தாழ்த்தி, தங்கள் பாவத்தை அறிக்கை யிட்டு, மன்னிப்புக் கேட்காதவர்களையும் நாம் மன்னிக்க வேண்டுமா?

நாம் வேதவசனங்களைக் கவனமாக ஆராய்வோமானால், ''இல்லை'' என்பதே இதற்குப் பதில் என்பதைக் கண்டுகொள்ளுவோம். பல கிறிஸ்தவர்களுக்கு இது வியப்பையளிக்கலாம். எல்லோரிடமும் அன்புகாட்ட வேண்டும் என்ற கட்டளை நமக்குக் கொடுக்கப்பட்டிருந் தாலும், எல்லோரையும் நாம் மன்னிக்க வேண்டும் என்பதில்லை என்பதை வேதவசனம் தெளிவாக்குகிறது.

எடுத்துக்காட்டாக, நமக்கு விரோதமாகப் பாவம் செய்த ஒரு சக விசுவாசியை நாம் வெறுமனே மன்னித்துவிட வேண்டுமென்று இயேசு எதிர்பார்க்கிறாரா? இல்லை, அவர் எதிர்பார்க்கவில்லை. இல்லா விட்டால், மத்தேயு 18:15—17 வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள ஒப்புரவாகுதலுக்கான படிகளை அவர் கொடுத்திருக்க மாட்டார். தீங்கிழைத்தவர் மனந்திரும்பாவிட்டால் அவர் இறுதியில் சபையை விட்டு விலக்கப்படுகிறார்.

> உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ் செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவி கொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சி களுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப் படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக் கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவி கொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப் படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக.

நான்காவது படி எட்டப்படுமானால் [சபையைவிட்டு விலக்குதல்] தீங்கிழைத்தவருக்கு மன்னிப்பு அளிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. ஏனென்றால் மன்னிப்பதும் சபையைவிட்ட விலக்கி வைக்கப்படுவதும் ஒன்றுக்கொன்று ஒப்பிடமுடியாத செயல்களாக இருக்கின்றன. ''நாங்கள் அவரை மன்னித்தோம், ஆனால் சபையை விட்டு விலக்கிவைத்துவிட்டோம்'' என்று ஒருவர் சொல்லுவார்

என்றால் அது விநோதமான காரியமாக இருக்கும். ஏனென்றால் மன்னிப்பு, துண்டித்தலுக்கு அல்ல ஒப்புரவாகுதலுக்கே வழிநடத்து கிறது. (''நான் உன்னை மன்னிக்கிறேன். ஆனால் இன்றிலிருந்து உன்னோடு எனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை'' என்று தேவன் சொல்லுவாரானால், நீங்கள் என்ன நினைப்பீர்கள்?) சபையை விட்டு விலக்கப்பட்ட அந்த நபரை ''அஞ்ஞானியைப் போலவும் ஆயக் காரனைப்போலவும்'' கருத வேண்டும் என்று இயேசுவானவர் சொல்லி யிருக்கிறார். இந்த இரண்டு வகைப்பட்ட மக்களோடும் யூதர்கள் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை. உண்மையில் அவர்கள் இவர்களை வெறுத்தார்கள்.

இயேசுவானவர் குறிப்பிட்டுள்ள நான்கு படிகளில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் படிகளில் தீங்கிழைத்தவர் மனந்திரும்பா விட்டால் அவர் மன்னிக்கப்படுவதில்லை. எந்தப் படியிலும் அவர் மனந்திரும்பாவிட்டால் அடுத்த படிக்கு எடுத்துச் செல்லப்படுகிறார். இப்போதும் அவர் மனந்திரும்பாத குற்றவாளிபோலவே நடத்தப்படு கிறார். தீங்கிழைத்தவர் உங்களுக்குச் ''செவிகொடுக்கும்போது'' மட்டுமே (அதாவது மனந்திரும்பும்போது) நீங்கள் உங்கள் சகோதரனை ''ஆதாயப்படுத்திக்கொண்டதாக'' (அதாவது, ஒப்புரவாகியதாக) சொல்ல முடியும்.

*மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே எதிர்கொள்ளுதலின் நோக்கமாகும்.* தீங்கிழைத்தவரின் மனந்திரும்புதலின் அடிப்படை யிலேயே மனனிப்பு வழங்கப்படுகிறது. எனவே 1) தீங்கிழைத்தவரை நாம் எதிர்கொள்ளுகிறோம். 2) அவர் மனந்திரும்புவார் 3)அவரை மன்னிக்கலாம் என்ற நம்பிக்கையோடு இதைச் செய்கிறோம்.

இது இப்படியிருக்கிறபடியால், தேவன் நாம் நமக்கு எதிராகத் தீங்கிழைத்து, எதிர்கொண்டபிறகும் மனந்திரும்பாமலிருக்கும் சகோதரர்களை வெறுமனே மன்னிக்க வேண்டும் என்று எதிர்பார்க்க வில்லை என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும். ஆனால் இதற்காகத் தீங்கிழைத்த விசுவாசியை நாம் வெறுக்க வேண்டும் என்பதில்லை. இதற்குமாறாக, தீங்கிழைத்த அவரை நாம் நேசிக்கிறபடியால், அவரை எதிர்கொள்ளுகிறோம். அவரை மன்னித்து, ஒப்புரவாக விரும்புகிறோம்.

என்றாலும் முதல் மூன்று படிகளின் மூலமாக ஒப்புரவாகுதலுக் கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்ட பிறகு, நான்காவது படி கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும் விதமாக உறவைத் துண்டிக்கிறது.[60] கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் விபசாரக்

[60] இப்படித் தள்ளப்பட்டவர் பின்னால் மனந்திரும்புவார் என்றால், அவருக்கு மன்னிப்பு அருளப்பட வேண்டும் என்றே இயேசு எதிர்பார்ப்பார் என்பது தெளிவாகும்.





காரர்கள், குடிகாரர்கள், ஒருபாலுறவுகொள்ளுபவர்கள் இவர்களோடு நாம் எந்த உறவும் கொள்ளக் கூடாது என்பதுபோல (பார்க்க, 1 கொரி. 5:11), சபை எதிர்கொண்ட பிறகும் மனந்திரும்ப மறுக்கும் கிறிஸ்தவர் களோடும் உறவு வைத்துக்கொள்ளக் கூடாது. இவர்கள் தாங்கள் மெய்யாகவே கிறிஸ்துவைப் பின்பற்றவில்லை என்பதை நிரூபிக் கிறார்கள். இவர்கள் அவருடைய சபைக்கு வசையாக இருக்கிறார்கள்.

## தேவனுடைய முன்மாதிரி

மற்றவர்களை மன்னிக்க வேண்டும் என்ற நமது பொறுப்பைக் குறித்து மேலும் சிந்திக்கும்போது, ஏன் தேவன் தாம் செய்யாத ஒன்றை நம்மைச் செய்யச் சொல்லுகிறார் என்ற கேள்வி எழுவதற்கும் வாய்ப்புண்டு. தேவன் குற்றமுள்ளவர்களை நேசித்து, அவர்களை மன்னிக்கும்படி தமது இரக்கத்தின் கரங்களை அவர்களை நோக்கி நீட்டுகிறார் என்பது நிச்சயமாகும். அவர் தமது கோபாக்கினையை நிறுத்திவைத்து, அவர்கள் மனந்திரும்ப நேரத்தைக் கொடுக்கிறார். ஆனால் அவர்கள் உண்மையில் மன்னிக்கப்படுவது அவர்களுடைய மனந்திரும்புதலைச் சார்ந்திருக்கிறது. *குற்றமுள்ள மக்கள் மனந்திரும்பாவிட்டால் தேவன் அவர்களை மன்னிப்பதில்லை.* எனவே அவர் நம்மிடமிருந்து இதற்கு அதிகமாக எதிர்பார்ப்பார் என்று நாம் ஏன் நினைக்க வேண்டும்?

இவையெல்லாம் இப்படியிருக்கிறபடியால், தேவனுடைய பார்வையில் மிக மோசமாகக் காணப்படும் மன்னிக்காதிருத்தல் என்ற பாவம், நமது மன்னிப்பை வேண்டுகிறவர்களை மன்னிக்காதிருக்கும் பாவமாகவே இருக்கும் அல்லவா? இயேசுவானவர் சபை ஒழுங்கைக் குறித்த இந்த நான்கு படிகளைக் குறித்துக் கூறிய பிறகு பேதுரு அவரிடம் கேட்ட கேள்வி சுவாரசியமானதாக இருக்கிறது.

> அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதர மட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன் (மத். 18:21–22).

சற்று முன்னர்தான் *ஒரு* பாவத்தின் காரணமாக மனந்திரும்பாத ஒரு சகோதரனை அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப்போலவும் கருதும்படி இயேசுவானவர் சொல்லியிருக்கும் வேளையில், இப்போது *நூற்றுக்கணக்கான* பாவங்களைச் செய்து, மனந்திரும்பாமலிருக்கும் ஒரு சகோதரனை நூற்றுக்கணக்கான முறை மன்னிக்கும்படி பேதுருவிடம் சொல்லியிருப்பாரா? நிச்சயமாகச் சொல்லியிருக்க

மாட்டார். நீங்கள் ஒரு நபரை மன்னிப்பீர்களானால் அவரை அருவருப்பான ஒருவராகக் கருத மாட்டீர்கள்.

நமது சிந்தனையைத் தூண்டும் மற்றொரு கேள்வி இதுவாகும்: ஒரு விசுவாசி நூற்றுக்கணக்கான தடவைகள் நூற்றுக்கணக்கான பாவங்களைச் செய்து மனந்திரும்பாமல் இருந்தாலும் அவரை மன்னிக்கும்படி இயேசுவானவர் எதிர்பார்ப்பார் என்றால், பிறகு ஏன் ஒரேயொரு பாவத்துக்காக, விபசாரக் குற்றம், குற்றம் செய்தவர் மனந்திரும்பாவிட்டால், திருமண உறவை முறித்துக்கொள்ள அவர் அனுமதித்திருப்பார் [பார்க்க, மத். 5:32]? [63] இது முரண்பாடாகத் தோன்றும் அல்லவா?

## ஒரு விளக்கம்

நானூற்றுத் தொண்ணூறு தடவைகள் சகோதரன் ஒருவனை மன்னிக்க வேண்டும் என்று இயேசுவானவர் பேதுருவுக்குப் பதிலளித்த பிறகு, தான் சொல்லுவதின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள உதவியாக அவர் ஒரு உவமைக் கதையைச் சொன்னார்:

> எப்படியெனில், பரலோக ராஜ்யம் தன் ஊழியக்கார ரிடத்தில் கணக்குப் பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருந்தது. அவன் கணக்குப் பார்க்கத் துவங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். கடனைத் தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான். அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்து விட்டான். அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன் வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்க வேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக் கொண்டான். அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்க வேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார் [மத். 18:23–35].

முதல் வேலைக்காரன் தன் எஜமானிடம் அதற்காக வேண்டிக்கொண்டபடியால் அவன் மன்னிக்கப்பட்டான் என்பதைக் கவனியுங்கள். இரண்டாவது வேலைக்காரனும் முதல் வேலைக் காரனிடம் தன்னை மன்னிக்கும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொண்டான் என்பதையும் கவனியுங்கள். முதல் வேலைக்காரன் தனக்குக் கிடைத்த மன்னிப்பை இரண்டாவது வேலைக்காரனுக்குக் கொடுக்கவில்லை. இதுவே எஜமானை அதிகமாகக் கோபப்படுத்தியது. இது இப்படியிருக்கிறபடியால், இயேசுவானவர் மனந்திரும்பாத ஒரு சகோதரனை மன்னிக்கும்படி போதிக்கிறார் என்று பேதுரு எடுத்துக் கொண்டிருக்கக் கூடுமா? இயேசுவின் உவமைக்கதையில் இதைப் பற்றி எதுவும் சொல்லப்பட்டிருக்கவில்லையே? ஏனென்றால் இயேசுவானவர் ஏற்கெனவே மனந்திரும்பாத ஒரு சகோதரனை எதிர்கொண்ட பிறகும் அவன் மனந்திரும்பாவிட்டால், அவனை அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப்போலவும் நடத்த வேண்டும் என்றல்லவா சொல்லியிருக்கிறார்?

[62] விபசாரம் செய்த கணவனோ அல்லது மனைவியோ கிறிஸ்தவர்களாக இருப்பார்களானால், ஒப்புரவாகுதலுக்காக இயேசுவானவர் கொடுத்திருக்கும் மூன்று படிகளைப் பின்பற்றிய பிறகே விவாகரத்துக்குச் செல்ல வேண்டும். குற்றம் புரிந்தவர் மனந்திரும்புவாரானால், நாம் இயேசுவின் கட்டளையின்படி அவருக்கு மன்னிப்பளிக்க வேண்டும்.

நமது முழு இருயத்தோடும் நாம் நமது சகோதரர்களை மன்னிக்காவிட்டால் நமக்குக் கிடைக்கும் தண்டனையைக் குறித்து இயேசுவானவர் சொல்லியிருப்பதின் அடிப்படையில், மனந்திரும்பாத ஒரு சகோதரனைத் தான் மன்னிக்க வேண்டும் என்று பேதுரு நினைத்திருக்க முடியாது. நாம் மன்னிக்காவிட்டால் நமக்கு ஏற்கெனவே மன்னிக்கப்பட்டிருக்கும் கடனை நாம் திரும்பச் செலுத்த வேண்டியிருப்பது மட்டுமின்றி, அப்படிச் செலுத்தும் வரையில், அது ஒருபோதும் முடியாத காரியம், உபாதிக்கிறவர்களின் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படுவோம் என்றும் இயேசுவானவர் சொல்லியிருக்கிறார். ஒரு சகோதரனை மன்னிக்காத கிறிஸ்தவனுக்கு இது நீதியான தண்டனையாக இருக்குமா? *அந்தச் சகோதரனைத் தேவன்கூட மன்னிக்கவில்லையே?* ஒரு சகோதரன் எனக்கு விரோதமாகப் பாவம் செய்வான் என்றால் அவன் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறான். அவன் மனந்திரும்பும் வரையில் தேவனும் அவனை மன்னிப்பதில்லை. தேவன் தாம் மன்னிக்காத ஒருவனை நான் மன்னிக்கவில்லை என்பதற்காக என்னை நீதியாகத் தண்டிக்க முடியுமா?

### காரியத்தின் சுருக்கம்

நமது சக விசுவாசிகளை நாம் எப்படி மன்னிக்க வேண்டும் என்று தாம் எதிர்பார்ப்பதைக் குறித்து இயேசுவானவர் லூக்கா 17:3—4 வசனங்களில் சுருக்கமாகக் கொடுத்திருக்கிறார்.

> உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க குற்றஞ் செய்தால், அவனைக் கடிந்துகொள்; *அவன் மனஸ்தாபப்பட்டால்,* அவனுக்கு மன்னிப்பாயாக. அவன் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: *நான் மனஸ்தாபப்படுகிறேன்* என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார் [அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இதைவிடத் தெளிவாகவும் சொல்ல முடியுமா? நமது சக விசுவாசிகள் மனந்திரும்பும்போது நாம் அவர்களை மன்னிக்க வேண்டும் என்று இயேசுவானவர் எதிர்பார்க்கிறார். நாம் ‘‘எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னித்ததுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்’’ என்று நாம் ஜெபிக்கும்போது, நாம் மற்றவர்களுக்குச் செய்ததை நமக்குச் செய்யும்படி தேவனிடம் *வேண்டிக் கொள்ளுகிறோம்.* நாம் *வேண்டிக்கொள்ளாவிட்டால்* அவர் மன்னிப்பதை நாம் ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. எனவே நம்மிடம் *வேண்டிக் கொள்ளாதவர்களை* நாம் மன்னிக்க வேண்டும் என்று அவர் ஏன் எதிர்பார்க்க வேண்டும்?





மறுபடியுமாக, இவையெல்லாம் நமக்கு விரோதமாகக் குற்றம் செய்த சகோதரன் அல்லது சகோதரிக்கு எதிராக மனதில் வன்மத்தை வைத்திருப்பதற்கு நம்மை அனுமதிக்கவில்லை. ஒருவர் மற்றவரிடம் அன்புகாட்ட வேண்டும் என்ற கட்டளை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவேதான் நமக்கு எதிராகக் குற்றம் செய்த ஒரு கிறிஸ்தவ சகோதரன் நம்மோடு ஒப்புரவாகும்படியாகவும், தேவனுக்கு எதிராகவும் அவன் பாவம் செய்திருக்கிறபடியால் அவரோடும் ஒப்புரவாகும்படியும் நாம் அந்த விசுவாசியை எதிர்கொள்ள வேண்டும் என்ற கட்டளை நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. *அன்பு இதைத்தான் செய்யும்.* என்றாலும், கிறிஸ்தவர்கள் அடிக்கடி எதிர்கொள்ளுதலைத் தவிர்க்கும்படியாக, தாங்கள் தங்களுக்கு எதிராகக் குற்றம் செய்த விசுவாசியை மன்னிப்பதாகச் சாக்குப்போக்குச் சொல்லுகிறார்கள். அவர்கள் உண்மையில் மன்னிக்கவில்லை என்பது அவர்களுடைய செயல்களிலிருந்து தெரிகிறது. அவர்கள் எப்படியும் குற்றம் புரிந்தவரைத் தவிர்க்கிறார்கள். அடிக்கடி தங்கள் வேதனையைக் குறிப்பிடுகிறார்கள். ஒப்புரவாகுதல் ஏற்படவில்லை.

நாம் பாவம் செய்யும்போது, தேவன் நம்மை நேசிக்கிறபடியினாலும், நம்மை மன்னிக்க விரும்புகிறபடியினாலும், நமக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் மூலமாக நம்மை எதிர்கொள்ளுகிறார். நாமும் அவருடைய செயலைப் பின்பற்றி, நமக்கு விரோதமாகப் பாவம் செய்த சக விசுவாசியை அன்போடு எதிர்கொண்டு மனந்திரும்புதலும், மன்னிப்பும், ஒப்புரவாகுதலும் ஏற்பட வழிவகுக்க வேண்டும்.

தேவன் எப்போதுமே தமது மக்கள் மெய்யான அன்போடு ஒருவர் மற்றவரை நேசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். இந்த அன்பு எப்போதுமே கடிந்துகொள்ளுதலுக்கு இடம் கொடுத்தாலும், வன்மத்துக்கு இடம் கொடுக்கவில்லை. மோசேயின் நியாயப் பிரமாணத்தில் இதற்கான கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது:

> உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக; பிறன்மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்துகொள்ள வேண்டும். பழிக்குப் பழி வாங்காமலும், ஜனப்புத்திரர் மேல் *பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக;* நான் கர்த்தர் [லேவி. 19:17—18 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

### ஒரு எதிர்ப்பு

ஆனால் இயேசுவானவர் மாற்கு 11:25—26 வசனங்களில் கூறிய வார்த்தைகளைக் குறித்து என்ன? இந்த வசனங்கள் நாம் எல்லோரையும்

எல்லாவற்றுக்காகவும், அவர்கள் மனந்திரும்பாவிட்டாலும்கூட, மன்னிக்க வேண்டும் என்று சொல்லவில்லையா?

> நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்கு மானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியா திருப்பார்.

இதைக் குறித்து நாம் இதுவரை பார்த்த வசனங்களை இது மீறவில்லை. நமது மன்னிப்பை வேண்டும் ஒருவருக்கு மன்னிக்காமல் இருப்பதே தேவனை அதிகமாகத் துக்கப்படுத்துகிறது என்பதை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். எனவே உறுதிசெய்யப்பட்ட இந்த உண்மையின் அடிப்படையில் இந்த வசனத்தை ஆராய்ந்து பார்ப்போம். நாம் தேவனுடைய மன்னிப்பைப் பெற வேண்டுமானால் நாம் மற்றவர் களை மன்னிக்க வேண்டும் என்பதை இயேசுவானவர் இங்கே வலியுறுத்துகிறார். அவர் மன்னிப்பைக் குறித்த குறிப்பான விவரங் களவையோ அல்லது மற்றொருவரிடமிருந்து மன்னிப்பைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்றோ இங்கே கூறவில்லை.

நாம் தேவனிடமிருந்து மன்னிப்பைப் பெற வேண்டுமானால், அவரிடம் அதற்காக வேண்டிக்கொள்ள வேண்டும் என்றும் இயேசு சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். அப்படியானால் நாம் வேண்டிக்கொள்ளுவதின் மூலமாகவே தேவனுடைய மன்னிப்பைப் பெற முடியும் என்று சொல்லும் [பார்க்க, மத். 6:12; 1 யோவான் 1:9] மற்றப் போதனைகளைப் புறக்கணித்துவிட வேண்டுமா? இயேசுவானவர் அதை இங்கே குறிப்பிடாதபடியால், நாம் பாவம் செய்யும்போது தேவனிடமிருந்து மன்னிப்புக்காக வேண்டிக்கொள்ள வேண்டியதில்லை என்று எடுத்துக்கொள்ள முடியுமா? வேதவசனங்கள் நமக்குச் சொல்லு பவைகளின் அடிப்படையில் இப்படி யூகிப்பது ஞானமுள்ள காரியமல்ல. நாம் மற்றவர்களை மன்னிப்பது அவர்கள் அதற்காக வேண்டிக் கொள்ளுவதைச் சார்ந்திருக்கிறது என்று வேதவசனம் போதிப்பதைப் புறக்கணிப்பதும் ஞானமில்லாத காரியமாகும்.

### மற்றொரு எதிர்ப்பு

இயேசுவானவர் தமது ஆடைகளுக்காகச் சீட்டுப்போட்ட போர்ச் சேவகர்களுக்காக ஜெபிக்கவில்லையா? ‘‘அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்’’ [லூக்கா 23:34]. தேவன் தம்மிடம் மன்னிப்புக் கேட்காத மக்களையும் மன்னிக்கிறார் என்பதை இது சுட்டிக்காட்டவில்லையா?





அது உண்மைதான், ஆனால் ஓரளவுக்குத்தான் அவர் மன்னிக்கிறார். தேவன் அறியாமையில் இருக்கிறவர்ளுக்கு இரக்கம் காட்டி, ஓரளவு அவர்களை மன்னிக்கிறார் என்பதை இது காட்டுகிறது. தேவன் பரிபூரண நீதியுள்ளவராக இருக்கிறபடியால், மக்கள் தாங்கள் பாவம் செய்திருக் கிறோம் என்பதை அறியும்போதுதான் அவர்களைக் கணக்குக்கொடுக்கும் படி செய்கிறார்.

இயேசுவானவர் அந்தப் போர்ச்சேவகர்களுக்காக ஜெபித்தது அவர் களுக்குப் பரலோகத்தில் இடம் இருக்கிறது என்பதற்கான உத்தரவாதம் கிடையாது. அவர்கள் அவர் தேவனுடைய குமாரன் என்று அறியாதபடியால் அவருடைய வஸ்திரங்களுக்காகச் சீட்டுப்போட்ட பாவத்துக்காக அவர்கள் கணக்குக்கொடுக்க வேண்டியிருக்காது என்பதை மட்டுமே இது உறுதிப்படுத்துகிறது. அவர்கள் அவரைத் தண்டிக்க வேண்டிய மற்றொரு குற்றவாளி என்றே கருதினார்கள். எனவே அவர்கள் அறிந்து செய்திருந்தால் தண்டிக்கப்பட வேண்டிய செயலை இப்போது அறியாமல் செய்தபடியால் தேவன் அவர்கள்மீது இரக்கம் காட்டுகிறார்.

போர்ச்சேவகர்கள் தாங்கள் தேவனுடைய குமாரனின் வஸ்திரத்தைப் பங்கிடுகிறோம் என்பதை அறியாதிருந்ததுபோல, நமக்குத் தீங்கிழைப்பவர் கள் அறியாமல் அதைச் செய்வார்களானால், நாம் அவர்களிடம் இரக்கம் காட்ட வேண்டும். நாம் அவிசுவாசிகளுக்கு அதாராணமான இரக்கம் காட்ட வேண்டுமென்று இயேசு எதிர்பார்க்கிறார் – நமது விரோதிகளிடம் அன்புகாட்ட வேண்டும், நம்மை வெறுப்பவர்களுக்கு நன்மைசெய்ய வேண்டும். நம்மைச் சபிப்பவர்களை ஆசீர்வதிக்க வேண்டும், நம்மைத் தவறாக நடத்துகிறவர்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் [பார்க்க, லூக்கா 6:27–28]. நமது அன்பைக் கொண்டு அவர்களுடைய விரோதத்தை அகற்ற நாம் முயல வேண்டும், தீமையை நன்மையினால் வெல்ல வேண்டும். மோசேயின் நியாயப்பிரமாணத்தில் கூட இந்தக் கருத்து கொடுக்கப்பட்டுள்ளது.

> உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதை யாவது தப்பிப் போகக் கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுபோய் விடுவாயாக. உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்து கிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவி செய்யா திருக்கலாமா? அவசியமாய் அவனோடேகூட அதற்கு உதவிசெய்வாயாக [யாத். 23:4–5].
>
> உன் சத்தரு பசியாயிருந்தால், அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத்

தண்ணீர் கொடு. அதினால் நீ அவன் தலையின்மேல் எரிகிற தழல்களைக் குவிப்பாய்; கர்த்தர் உனக்குப் பலனளிப்பார் [நீதி. 25:21–22].

இயேசுவானவர் நமது விரோதிகளிடம் அன்புகாட்ட வேண்டும் என்றும், நம்மை வெறுப்பவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும், நம்மைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்றும், நம்மைத் தவறாக நடத்துகிறவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்றும் சொல்லியிருந்தாலும் [பார்க்க, லூக்கா 6:27–28], அவர்களில் எவரையாவது மன்னிக்க வேண்டும் என்று அவர் சொல்லாதிருப்பது சுவாரசியமான காரியமாகும். தேவன் மக்களை மன்னிக்காமல் அவர்களிடம் அன்புகாட்டுவதுபோல நாமும்கூடமக்களை மன்னிக்காமல் அவர்களிடம் அன்புகாட்ட முடியும். தேவன் நமக்குக் கட்டளை கொடுத்திருக்கிறபடியால், நம்மால் அவர்களிடம் அன்புகாட்ட *முடியும்* என்பது மட்டுமல்ல, நாம் அன்பு காட்டவும் *வேண்டும்*. அவர்கள்மீதான நமது அன்பு செயல்களில் வெளிப்பட வேண்டும்.

தமது வஸ்திரங்களைப் பிரிக்கும்படி சீட்டுப்போட்ட போர்ச்சேவகர்களை மன்னிக்கும்படி இயேசுவானவர் பிதாவானவரிடம் வேண்டிக் கொண்டதினால், இதைக் குறித்து நாம் வேதவசனங்களிலிருந்து கற்றுக்கொண்ட மற்ற எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டும் என்றோ அல்லது புறக்கணிக்க வேண்டும் என்றோ, நமக்கு விரோதமாகப் பாவம் செய்த எல்லோரையும் மன்னிக்க வேண்டும் என்றோ தேவன் எதிர்பார்க்கவில்லை. நமக்கு விரோதமாக அறியாமல் பாவம் செய்தவர்களை நாம் உடனே மன்னித்துவிட வேண்டும் என்பதையும், அவிசுவாசிகளிடம் அசாதாரணமான இரக்கம் காட்ட வேண்டும் என்பதையும் மட்டுமே இது போதிக்கிறது.

### மத்தேயு 18:15–17 வசனங்களைச் செயல்படுத்துதல்

இயேசுவானவர் குறிப்பிட்டுள்ள ஒப்புரவாகுதலின் நான்கு படிகளைப் புரிந்துகொள்ளுவது எளிதாக இருந்தாலும், அதைச் செயல்படுத்துவது உண்மையில் சிரமமாக இருக்கலாம். இயேசுவானவர் இந்த நான்கு படிகளைக் குறித்துச் சொல்லும்போது, அவர் சகோதரன் அ என்பவரின் பார்வையில் அதைச் சொல்லியிருக்கிறார். சகோதரன் ஆ என்பவர் தனக்கு எதிராகக் குற்றம் புரிந்திருக்கிறார் என்ற உறுதிப்பாட்டை இவர் பெற்றிருக்கிறார். என்றாலும் சகோதரன் அ எண்ணுவது தவறாக இருக்கலாம். எனவே எல்லாவிதமான சாத்தியக் கூறுகலையும் ஆராயும்படியான ஒரு சூழ்நிலையை நாம் கற்பனைசெய்து பார்ப்போம்.

சகோதரன் ஆ தனக்கெதிராகக் குற்றம் புரிந்திருக்கிறார் என்ற உறுதிப்பாட்டைச் சகோதரன் அ பெற்றிருப்பாரானால், முதலில் தான் அளவுக்கதிகமாகக் குற்றம் சாட்டவில்லை, சகோதரன் ஆ வின்





கண்களில் துரும்பைத் தேடவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். பல சிறிய குற்றங்களைப் பெரிதுபடுத்தாமல் இரக்கம் காட்ட வேண்டும் [பார்க்க, மத். 7:3–5]. என்றாலும் ஒரு குறிப்பிட்ட குற்றத்துக்காக சகோதரன் அ சகோதரன் ஆவின்மீது கோபம் கொண்டிருப்பாரானால், அவர் சகோதரன் ஆவை எதிர்கொள்ள வேண்டும்.

அவர் இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, தனிமையில் இதைச் செய்து, சகோதரன் ஆவின் மீது தனது அன்பை வெளிப்படுத்த வேண்டும். அவருடைய செயல்நோக்கம் அன்பாகவும், அவருடைய இலக்கு ஒப்புரவாகுதலாகவும இருக்க வேண்டும். இந்தக் குற்றத்தைக் குறித்து அவர் வேறு எவரிடமும் சொல்லக் கூடாது. ‘‘அன்பு திரளான பாவங்களை மூடும்’’ [1 பேதுரு 4:8]. நாம் ஒருவரிடம் அன்புகா ட்டுவோமானால், நாம் அவைகளை மறைப்போம்.

இந்த எதிர்கொள்ளுதல் அன்பை வெளிப்படுத்தும் விதமாக சாந்தமானதாக இருக்க வேண்டும். அவர் இப்படியாகச் சாந்தமாகப் பேச வேண்டும். ‘‘சகோதரன் ஆ, நான் நமது உறவை அதிகமாக மதிக்கிறேன். ஆனால் உங்களுக்கு எதிராக எனது இருதயத்தில் ஒரு தடுப்புச் சுவர் எழும்பும்படியாக ஒரு காரியம் நடந்துவிட்டது. அந்தச் சுவர் அங்கே இருப்பதை நான் விரும்பவில்லை. எனவே நீங்கள் எனக்கு விரோதமாகத் தீங்கிழைத்துவிட்டீர்கள் என்ற உணர்வு எனக்கு எப்படி ஏற்பட்டது என்பதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நாம் ஒப்புரவாகுதலுக்காக முயற்சிசெய்வோம். இநதப் பிரச்சினை ஏற்படும்படியாக நான் ஏதாவது செய்திருந்தால், அதை என்னிடம் சொல்லுங்கள்.’’ பிறகு அவர் சாந்தமாக சகோதரன் ஆ விடம் அந்தக் குற்றம் என்ன என்பதைச் சொல்ல வேண்டும்.

பெரும்பாலான வேளைகளில் தான் சகோதரன் அ வுக்குக் காயம் ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதையே சகோதரன் ஆ உணர்ந்திருக்க மாட்டார். இதை அவர் அறிந்தவுடனே மன்னிப்புக் கேட்பார். இப்படிப்பட்ட நிலை வரும்போது சகோதரன் அ உடனடியாகச் சகோதரன் ஆவை மன்னிக்க வேண்டும். ஒப்புரவாகுதல் நடந்துவிட்டிருக்கிறது.

அல்லது சகோதரன் அ ஏற்கெனவே செய்த ஒரு குற்றத்துக்குப் பதிலாகவே தான் இப்படிச் செய்ததாக சகோதரன் ஆ சொல்லி, தனது செயலை நியாயப்படுத்த முயலுவார். இது இப்படியிருக்குமானால், சகோதரன் ஆ ஏற்கெனவே சகோதரன் அ வை எதிர்கொண்டிருக்க வேண்டும். ஆனால் இப்போதாவது பேச்சுவார்த்தைக்கும் ஒப்புரவாகுதலுக்கும் வழி கிடைத்திருக்கிறது.

இப்படிப்பட்ட வேளைகளில் என்ன நடந்தது என்பதைக் குறித்து இருவரும் விவாதிக்க வேண்டும். ஒவ்வொருவரும் குற்றத்தை ஒப்புக்

கொள்ள வேண்டும். பிறகு ஒருவர் மற்றவருக்கு மன்னிப்பளித்து, மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இப்படியாக ஒப்புரவாகுதல் உண்டாகியிருக்கிறது.

அ மற்றும் ஆ இருவரும் ஒப்புரவாகாமலிருப்பது மூன்றாவது சாத்தியக் கூறாகும் இப்போது இரண்டாவது படிக்குச் செல்ல வேண்டும்.

### படி இரண்டு

ஒப்புரவாகுதலை எட்டும்படியாக இப்போது பேச்சு வார்த்தையில் யார் சேர்ந்து கொள்ளுவது என்பதை சகோதரன் அ, சகோதரன் ஆ இரண்டு பேரும் ஒப்புக்கொண்டால் நலமாக இருக்கும். சகோதரன் இ மற்றும் சகோதரன் ஈ இருவரும் பாரபட்சமில்லாமல் செயல்படும்படியாக அவர்கள் சகோதரன் அ மற்றும் சகோதரன் ஆ இருவரையும் அறிந்தவர்களாகவும், அவர்களிடம் அன்புகாட்டுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். அ மற்றும் ஆ வின் மீதுள்ள அன்பு மற்றும் மரியாதையின் காரணமாக இவர்களுக்குப் பிணக்கைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

இந்த இடத்தில் சகோதரன் ஆ ஒத்துழைக்காவிட்டால், சகோதரன் அ உதவிசெய்யக் கூடிய வேறு இருவரை அழைக்க வேண்டும்.

சகோதரர் இயும் ஈயும் ஞானமுள்ளவர்களாக இருப்பார்களானால், அவர்கள் சகோதரன் அ மற்றும் ஆ இருவரின் வாதத்தையும் கேட்ட பிறகே நீதிக்கான முடிவை எடுக்க வேண்டும். சகோதரன் இ மற்றும் ஈ இருவரும் தங்கள் முடிவை அறிவித்தபிறகு, அ மற்றும் ஆ இருவரும் அவர்களுடைய தீர்மானத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும். இவர்களால் பரிந்துரை செய்யப்படுகிறபடி மன்னிப்புக் கேட்க வேண்டும் அல்லது செய்த தவறைச் சரிசெய்ய வேண்டும் அல்லது இரண்டையும் செய்ய வேண்டும்.

ஒருவர் மட்டுமே மனந்திரும்ப வேண்டியிருக்கும் நிலையில் சகோதரன் இ மற்றும் ஈ தாங்கள் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்படாமல் இருக்கும்படியாக இருவருமே மனந்திரும்ப வேண்டும் என்ற முடிவை எடுக்கக் கூடாது. தங்கள் தீர்ப்பை சகோதரன் அ மற்றும் ஆ இருவரும் புறக்கணித்துவிடுவார்களானால், இந்த வழக்கு முழுச் சபைக்கு முன்னால் கொண்டுவரப்படும் என்பதையும், அப்போது சபையார் எல்லோருமே இந்தக் கோழைத்தனமான தீர்ப்பை அறிந்துகொள்ளுவார்கள் என்பதையும் அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். யாரேனும் ஒருவர் தீர்ப்புக் கூறும்படி அழைக்கப்பட்டால், அவர் பாதிக்கப்பட்ட இரண்டு பேருடனும் நட்புறவைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று சோதிக்கப்படக் கூடும் என்கிறபடியினால்தான் தீர்ப்பு வழங்கும் பொறுப்பு இருவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. அப்போது அவர்கள் ஒருவரையொருவர் சத்தியத்தில் பலப்படுத்திக்கொள்ள முடியும். மேலும் அவர்களுடைய தீர்மானங்கள் சகோதரன் அ மற்றும் ஆவுக்கு முன்னால் வலுவானவையாக இருக்கும்.





### படி மூன்று

சகோதரன் அ அல்லது ஆ இருவருமோ அல்லது இருவரில் ஒருவரோ சகோதரன் இ மற்றும் ஈ வழங்கும் தீர்ப்பைப் புறக்கணித்தால், முழுச் சபைக்கும் முன்னால் இந்தக் காரியம் கொண்டுவரப்பட வேண்டும். அமைப்புரீதியான சபைகளில் இந்த மூன்றாவது படி பின்பற்றப்படவில்லை. ஏனென்றால் யாருக்கு ஆதாரவளிப்பது என்பதில் சபையாரிடையே பிரிவினை ஏற்படக்கூடும். உள்ளூர் சபைகள் வீட்டுச் சபைகளைவிடப் பெரியதாக இருக்க வேண்டும் என்று இயேசுவானவர் ஒருபோதும் நோக்கம் கொண்டிருக்கவில்லை. எல்லோரும் சகோதரன் அ மற்றும் ஆவை அறிந்து, அவர்களுக்காக அக்கறைப்படும் இந்தச் சிறிய சபையே மூன்றாவது படிக்குரிய சரியான ஆவிக்குரிய பின்னணியாக இருக்கிறது. அமைப்புரீதியான சபையில் சகோதரன் அ மற்றும் ஆவை அறிந்து, அவர்களிடம் அன்புகாட்டுபவர்களைக் கொண்ட ஒரு சிறிய குழுவின் பின்னணியில் மூன்றாவது படியைச் செயல்படுத்த வேண்டும். சகோதரன் அ மற்றும் ஆ இருவரும் வெவ்வேறான உள்ளூர் சபைகளின் உறுப்பினர்களாக இருப்பார்களானால், இரண்டு சபைகளையும் சேர்ந்த பொருத்தமான நபர்கள் தீர்மானம் எடுக்கும் குழுவாக ஒன்றுசேர வேண்டும்.

சபையானது தனது தீர்ப்பை அளித்த பிறகு, சகோதரன் அ மற்றும் ஆ இருவருமே எதிர்த்து நிற்பதின் பின்விளைவுகளை அறிந்து அந்தத் தீர்ப்புக்குக் கீழ்ப்படிய வேண்டும். மன்னிப்பு கேட்கப்பட வேண்டும், மன்னிப்பு கொடுக்கப்பட வேண்டும், ஒப்புரவாகுதல் உண்டாக வேண்டும்.

சபையின் தீர்ப்பை சகோதரன் அ அல்லது ஆ இருவரில் எவராவது ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவர் சபையைவிட்டு விலக்கிவைக்கப்பட வேண்டும், சபைக்குள் எவரும் இனிமேல் அவரோடு உறவுவைத்துக் கொள்ளக் கூடாது. பெரும்பாலும், இப்படிப்பட்ட நிலை வரும்போது மனந்திரும்பாத நபர் தானாகவே சபையைவிட்டு விலகிக்கொள்ளுகிறார். இந்தச் செயல்முறையின் எந்தப் படியும் அவருக்குத் திருப்தியளிக்காவிட்டால் அவர் ஏற்கெனவே இப்படிச் செய்திருப்பார். இது தனது ஆவிக்குரிய குடும்பத்திடம் அன்புகாட்ட வேண்டும் என்பதில் அவருடைய ஒப்படைப்பு குறைவுபடுவதையே வெளிப்படுத்துகிறது.

### ஒரு பொதுவான பிரச்சினை

அமைப்புரீதியான சபைகளில் மக்கள் ஒரு சபையைவிட்டுவிட்டு மற்றொரு சபையில் சேர்ந்துகொள்ளுவதின்மூலம் தங்கள் வழக்குகளுக்குத் தீர்வுகாண்கிறார்கள். எப்படியாகிலும், தனது ராஜ்யத்தைப் பெருகப்பண்ண வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருக்கும், மற்றப் போதகர்களோடு சரியான உறவைக் கொண்டிராத போதகர்கள் இப்படிப்பட்ட நபர்களை ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய புலம்பல்

களுக்குச் செவிகொடுக்கிறார்கள். இது ஒப்புரவாகுதல் குறித்த இயேசுவின் படிகளை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடுகிறது. இயல்பாக இப்படிப்பட்ட நபர்கள் மறுபடியும் ஏதேனும் பிரச்சினையின் காரணமாக ஒருசில மாதங்களில் அந்தச் சபையையும் விட்டுவிட்டு வேறொரு சபையில் சேர்ந்துகொள்ளுகிறார்கள்.

ஒரு வீட்டுச் சபையாக இருக்கக் கூடிய அளவில் சபைகள் சிறியதாக இருக்க வேண்டும் என்றே இயேசுவானவர் எதிர்பார்த்தார். உள்ளூர் போதகர்கள்/மூப்பர்கள்/கண்காணிகள் ஒரே சரீரமாக இணைந்து செயல்பட வேண்டும் என்றே அவர் விரும்பினார். எனவே ஒருவர் ஒரு சபையிலிருந்து தள்ளப்படுகிறார் என்றால் அவர் எல்லாச் சபைகளிலிருந்தும் தள்ளப்படுகிறார் என்றே அர்த்தமாகும். புதிதாக வரும் கிறிஸ்தவர்களிடம் அவர்களுடைய முந்தைய சபைப் பின்னணியைக் குறித்துக் விசாரிப்பது போதகர்கள்/மூப்பர்கள்/கண்காணிகள் இவர்களின் பொறுப்பாகும். பிறகு இப்படிப்பட்ட மக்களைச் சேர்த்துக்கொள்ளலாமா என்பதை அறிய முந்தைய சபையின் தலைவர்களோடு தொடர்புகொள்ள வேண்டும்.

## ஒரு பரிசுத்த சபையைக் குறித்த தேவனுடைய நோக்கங்கள்

அமைப்புரீதியான சபைகளில் மற்றொரு பொதுவான பிரச்சினை பலர் வெறுமனே சபை ஆராதனைகளில் கலந்துகொள்ளுவதாகும். அவர்கள் ஒருவர் மற்றவருக்குக் கணக்குக்கொடுக்கக்கூடிய உறவைப் பெற்றிருப்பதில்லை, அவர்களுடைய உறவுகள் வெறும் சமுதாய உறவுகளாகவே இருக்கின்றன. எனவே போதகர் உட்பட எவரும் அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை அறிந்திருப்பதில்லை, இதனால் பரிசுத்தமில்லாத மக்கள் தாங்கள் பங்குகொள்ளும் சபைகளுக்குத் தொடர்ந்து இழுக்கையே உண்டாக்கிவருகிறார்கள். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் இவர்களைப் பார்க்கும் வெளியார் இவர்களுக்கும் அவிசுவாசிகளுக்கும் இடையே வேறுபாடு இல்லை என்பதையே காண்பார்கள்.

இது மட்டுமே அமைப்புரீதியான சபைகள் பரிசுத்த சபையைக் குறித்த தேவனுடைய நோக்கத்துக்குப் பொருந்திவரவில்லை என்பதை நிரூபிப்பதற்குப் போதமானதாக இருக்கிறது. பெரிய அமைப்புரீதியான சபைகளிலேயே பரிசுத்தமில்லாத, மாய்மாலமான மக்கள் ஒளிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவுக்கு இழுக்கைக் கொண்டுவருகிறார்கள். மத்தேயு 18:15–17 வசனங்களை நாம் வாசிக்கும்போது, தமது சபையானது தன்னையே சுத்திகரித்துக்கொள்ளும் ஒரு சரீரமாக, அதில் ஒப்படைப்புக்கொண்ட மக்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே இயேசுவானவரின் நோக்கம் என்பது தெளிவாகிறது. உலகம் சபையை நோக்கிப் பார்க்கும்போது, அது அவருடைய பழுதில்லாத மணவாட்டி என்பதைக் காண வேண்டும். ஆனால் இன்றோ தனது மணவாளனுக்கு





உண்மையில்லாத ஒரு பெரிய வேசியையே வெளியேயுள்ள மக்கள் காண்கிறார்கள்.

கொரிந்திய சபையில் ஒரு சிக்கலான சூழ்நிலை வந்தபோது பவுல் அப்போஸ்தலன் என்ன செய்தார் என்பதிலிருந்து சபை இப்படித் தன்னைத் தானே சுத்திகரித்துக்கொள்ளுவதே தேவனுடைய நோக்கம் என்பது இன்னும் தெளிவாகிறது. சபையாகிய சரீரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உறுப்பினர் உண்மையில் தனது தகப்பனின் மறுமனையாட்டியோடு வாழந்துகொண்டிருந்தான்:

> உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே; ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறானே; அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத விபசாரமாயிருக்கிறதே. இப்படிப்பட்ட காரியஞ்செய்தவனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப்படைந்திருக்கிறீர்கள். நான் சரீரத்திலே உங்களுக்குத் தூரமாயிருந்தும், ஆவியினாலே உங்களோடேகூட இருக்கிறவனாய், இப்படிச் செய்தவனைக் குறித்து நான் கூட இருக்கிறதுபோல, நீங்களும், என்னுடைய ஆவியும், நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவந்திருக்கையில், அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தீர்ப்புச் செய்கிறேன்... விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன். ஆனாலும், இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர் இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப் போகவேண்டியதாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக் கூடாது; அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது. புறம்பே

> இருக்கிறவர்களைக் குறித்துத் தீர்ப்புச் செய்கிறது என் காரியமமா? உள்ளே இருக்கிறவர்களைக் குறித்தல்லவோ நீங்கள் தீர்ப்புச் செய்கிறீர்கள்? புறம்பே இருக்கிறவர்களைக் குறித்துத் தேவனே தீர்ப்புச் செய்வார். ஆகையால் அந்தப் பொல்லாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப் போடுங்கள் [1 கொரி. 5:1–5, 9–13].

இந்தக் குறிப்பிட்ட மனிதன் மெய்யான விசுவாசி இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறபடியால், இவனை ஒப்புரவாகுதலின் படிகளில் வழிநடத்திச் செல்ல வேண்டிய அவசியமில்லை. பவுல் அவனை ''பொல்லாதவன்'' என்று அழைக்கிறார். மேலும், ஒருசில வசனங்கள் கழித்துப் பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை [1 கொரி. 6:9–10].

கொரிந்திய சபையைச் சேர்ந்த இந்த மனிதனைப்போல ஒழுக்கக்கேடான ஒருவன் தனது விசுவாசம் பொய்யானது என்பதைக் காட்டிக்கொடுக்கிறான் என்று பவுல் நம்பினார். இப்படிப்பட்டவர்களைச் சகோதரராக மதித்து, ஒப்புரவாகுதலின் நான்கு படிகளின் வழியாக வழிநடத்திச் செல்லக்கூடாது. அவர்கள் சபையைவிட்டு விலக்கி வைக்கப்பட வேண்டும். ''அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தீர்ப்புச் செய்கிறேன்'' என்று பவுல் எழுதியிருக்கிறார் [1 கொரி. 5:5].

இன்று உலகெங்கிலுமுள்ள பெரிய சபைகளில் சில வேளைகளில் நூற்றுக்கணக்கான மக்கள் கிறிஸ்தவர்களைப்போலப் பாவனை செய்கிறார்கள். இவர்கள் வேதாகம தகுதிநிலைகளின்படி அவிசுவாசிகளாக இருக்கிறார்கள். இவர்கள் சபையை விட்டு விலக்கிவைக்கப்பட வேண்டும். சபையானது தனக்குள்ளேயிருக்கும் வேசிமார்க்கத்தாரையும், விபசாரக்காரரையும், ஒருபாலுறவு கொண்டவர்களையும், குடிவெறியர்களையும் விளக்கிவைக்கும் பொறுப்பைப் பெற்றிருக்கிறது என்று வேதவசனம் தெளிவாகக் காட்டுகிறது. என்றாலும் இன்று இத்தகையவர்கள் ''கிருபையின்'' அடிப்படையில், ''போராடிக்கொண்டிருக்கும்





விசுவாசிகளாக'' ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். இவர்கள் இவர்களைப் போன்ற அதே பிரச்சினைகளைக் கொண்ட மற்ற ''விசுவாசிகளால்'' ஆறுதல் பெறும்படியாக ஆதரவளிக்கும் குழுக்களுக்குள் வைக்கப்படுகிறார்கள். இது இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தின் வாழ்க்கையையே மாற்றும் வல்லமைக்கு ஒரு நேரடியான அவமதிப்பாக இருக்கிறது.

## விழுந்துபோன தலைவர்கள்

இறுதியாக, விபசாரம் போன்ற மோசமான பாவத்தில் விழுந்துபோன ஒரு தலைவர் அவர் மனந்திரும்பியவுடன் உடனடியாக அவருடைய முந்தைய தலைமைப் பொறுப்பில் அமர்த்தப்படலாமா? ஆண்டவர் அந்த மனந்திரும்பிய தலைவரை உடனடியாக மன்னித்தாலும் [சபையும் அப்படியே மன்னிக்க வேண்டும்], விழுந்துபோன தலைவர் தான் யாருக்கு ஊழியம் செய்தாரோ அவர்களுடைய நன்மதிப்பை இழந்துபோயிருப்பார். *நன்னம்பிக்கை என்பது நாம் சம்பாதித்துக் கொள்ளும் ஒன்றாகும்.* எனவே விழுந்துபோன தலைவர்கள் தானாக முன்வந்து தலைமைப்பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும். தாங்கள் நம்பிக்கைக்குரியவர்கள் என்பதை நிரூபிக்கும் வரையில் ஆவிக்குரிய கண்காணிப்புக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். அவர்கள் மறுபடியுமாகத் துவங்க வேண்டும். மறுபடியுமாக நம்பிக்கையைச் சம்பாதித்துக்கொள்ளும்படியாகச் சிறிய வழிகளில் தாழ்மையோடு ஊழியம்செய்ய விருப்பமில்லாதவர்கள் சரீரத்துக்குள்ளாக எவராலும் தலைவர்களாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடாது.

## சுருக்கம்

''எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லும்படி'' அழைக்கப்பட்டிருக்கும் [2 தீமோ. 4:2] சீஷர்களை உருவாக்கும் ஊழியர்களாக இருக்கும் நாம் நமது அழைப்பிலிருந்து விலகாமல் இருப்போமாக. எப்போதுமே இரக்கமுள்ள நீடிய பொறுமையினாலும், தேவைப்படும்போது சாந்தமுள்ள எதிர்கொள்ளுதலினாலும், மேலும் தேவைப்பட்டால் மற்றவர்களின் உதவியோடு கூடுதலான எதிர்கொள்ளுதலினாலும், வேண்டிக்கொள்ளப்படும்போது மன்னிப்பதின் மூலமாகவும் நமது சீஷர்கள் மெய்யாகவே ஒருவர் மற்றவரின்மீது அன்புகாட்டும்படி நாம் போதிப்போமாக. முறிந்துபோன உறவுகளுக்கு எந்தவித மெய்யான குணமாக்குதலையும் கொண்டுவராத பொய்யான மன்னிப்பைவிட இது எவ்வளவுதூரம் மேன்மையானது! ஆண்டவருடைய சபையைத் தூய்மையானதாகவும் பரிசுத்தமானதாகவும் அவருடைய நாமத்துக்கு மகிமையைக் கொண்டுவருவதாகவும் காத்துக்கொள்ளும்படி ஒவ்வொரு அம்சத்திலும் ஆண்டவருக்குக் கீழ்ப்படிவதை நாடுவோமாக!

எதிர்கொள்ளுதலைப் பற்றியும், சபை ஒழுங்கு நடவடிக்கையைப் பற்றியும் மேலும் ஆய்வுசெய்ய பார்க்கவும், ரோமர் 16:17–18; 2 கொரி. 13:1–3; கலா. 2:11–14; 2 தெச. 3:6, 14–15; 1 தீமோ. 1:19–20; 5:19–20; தீத்து 3:10–11; யாக். 5:19–20; 2 யோவான் 10–11.